**MCOP NO:4796/2022 DATE:05.09.2024**

ம.சா.1

பெயா்.தீபா

க/பெ.திரு. ஏகாம்பரம்

வயது. 35

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 9 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிா்மனுதாரா் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். தடாமண்டலம், நெல்லூா் மாவட்டம், ராமாபுரம் (Po), ஆந்திரபிரதேசம் என்ற முகவாியில் வசிக்கிறேன். பிரமாணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தொியும். என் கணவா் கூலி வேலை செய்கிறாா். நானும் கூலி வேலைக்கு செல்வேன். விபத்து பெருவேடு என்ற இடத்தில் நடந்தது. விபத்து நடந்தவுடன் அருகில் உள்ள இரண்டு மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்கு சென்ற போது காயம் அதிகமாக இருப்பதால் அவா்கள் சொன்னதின்போில் ஸ்டேன்லி மருத்துவமனையில் என் மகனை சோ்த்தேன். விபத்து நடந்த இடம் தேசிய நெடுஞ்சாலை ஆகும். அதே போல் விபத்து நடந்த நேரம் போக்குவரத்து அதிகமாக இருக்ககூடிய நேரம் என்றால் சாிதான். என்னுடைய மகன் கவனக்குறைவாக சாலையை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சாியல்ல. புகாா் பதிவு செய்வதற்கு 21 நாட்கள் காலதாமதமானது. மருத்துவமனைக்கு போக்குவரத்து செலவு நான் அதிகமாக கேட்டிருக்கிறேன் என்றால் அது தட்டச்சு பிழை ஆகும். என்னுடைய மகனின் பொருட்கள் சேதம் அடைந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். மருத்துவசெலவிற்கு பில்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் ரூ.1 1/2 லட்சம் வரை செலவானது ஆனால் அதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் குறிப்பிட்டுள்ள பாலிசியானது விபத்தில் ஈடுபட்ட காருக்கு உாியது இல்லை என்றும் அதனால் காப்பீடு நிறுவனம் பொறுப்பு இல்லை என்றால் சாியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோாியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சாியல்ல. என் மகனின் கவனக்குறைவு தான் இந்த விபத்திற்கு காரணம் என்றும் அதனால் 2ம் எதிா்மனுதாரா் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவா் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.